செ.வெ.எண்.289 நாள்.02.05.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கிராம சுயாட்சி இயக்கத் திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கிராம சுயாட்சி இயக்கத் திட்டம் தொடர்பான ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர் / தொழில்கள் ஆணையர் மற்றும் இயக்குநர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று **(02.05.2018)** நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம சுயாட்சி இயக்கத்தில் மத்திய அரசின் அனைவருக்கும் வங்கி கணக்கு, பிரதம மந்திரி காப்பீட்டுத் திட்டம், பிரதம மந்திரி விபத்து காப்பீட்டுத் திட்டம், அனைவருக்கும் எரிவாயு இணைப்பு வழங்குதல், அனைவருக்கும் LED பல்பு மானிய விலையில் வழங்குதல், அனைவருக்கும் மின் இணைப்பு வழங்குதல், சுகாதாரத்துறையின் மூலம் கர்ப்பிணி மற்றும் இரண்டு வயது குழந்தைகளுக்கு தடுப்பூசி உள்ளிட்ட 7 திட்டங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 29 கிராம ஊராட்சிகளிலும் 100 சதவீதம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திட வேண்டும். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மே 5ம் தேதிக்குள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு முழுமையாக முடிக்க வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, கிராம சுயாட்சி இயக்க மத்திய பார்வையாளர்கள்/ சார்பு செயலர்கள் திரு.கலாதரன், திரு.பத்மநாபன், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, முன்னோடி வங்கி மேலாளர் திரு.கஜேந்திரநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.